**கவனிக்க.-** *2018.04.20 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2069 - 2018 අප්‍රේල් මස 27 වැනි සිකුරාදා - 2018.04.27

*2069 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 798 | வரவு செலவுக் கூற்றுகள் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - | வரவு செலவுத் திரட்டுகள் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 804 | ஆதன விற்பனைகள் | - |
| துணைவிதிகள் | - | ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | | வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 806 |


**கவனிக்க.-** (i) *காணி (பராதீனப்படுத்தல் மீதான மட்டுப்பாடுகள் ((திருத்தம்) சட்டமூலம் 2018, ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

(ii) *கடை, அலுவலக ஊழியர் (ஊழியத்தையும் வேதனத்தையும் ஒழுங்குபடுத்தல்) (திருத்தம்) சட்டமூலம் 2018, ஏப்பிறல் மாதம் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி* II *இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.*

### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான
### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, *அதாவது 2018, மே மாதம் 18 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2018, மே மாதம் 04 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

*"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."*

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர் (பதில்).*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*

*கொழும்பு 8,*

*2018 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

797 - B81276- 5,403(2018/04)

# பதவிகள் வெற்றிடம்

**நீர்கொழும்பு மாநகர சபை**

மேல் மாகாண அரச சேவை பதவி வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு

*நீர்கொழும்பு மா நகர சபையில் தற்போது பதவி வெற்றிடங்களாக காணப்படும் பின்வரும் பதவி வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்பதற்காக தேவையான தகைமைகளைக் கொண்ட மேல் மாகாணத்தைச் சேர்ந்த நிரந்தர வதிவாளர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் பின்வருமாறு தயாரிக்கப்பட்ட மாதிரி விண்ணப்பப்படிவத்தை பூர்த்திசெய்து "ஆணையாளர், மாநகர சபை, நீர்கொழும்பு" என்ற முகவரிக்கு 2018.05.27 ஆந் திகதிக்கு முன் எனக்குக் கிடைக்கக் கூடியவகையில் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்கப்பட வேண்டும்.*

| தொடர் இல. | பதவிப் பெயர் | பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை | தரம் | சம்பள அளவுத் திட்டம் |
|---|---|---|---|---|
| 01 | வேலை/களம் ஊழியர் | 02 | III | PL-1-2016 (பொ.நி.சு.3/2016 இன் படி) ரூபா 24,250-10X250-10X270-10X 300-12X330- ரூபா 36,410 அடிப் படை சம்பள அளவுத் திட்டம் ரூபா 24,250 (4 ஆவது சம்பள படிமுறைக்கு வருவதற்கு முன்னரான செயலாற்றுகை தடை தாண்டல்). |
| 02 | மோட்டார் மெக்கனிக் | 01 | III | PL-2-2016 (பொ.நி.சு.3/2016 இன் படி) ரூபா 25,250-10X270-10X300-10X 330-12X350- ரூபா 38,450 அடிப் படை சம்பள அளவுத் திட்டம் ரூபா 25,250 (4 ஆவது சம்பள படிமுறைக்கு வருவதற்கு முன்னரான செயலாற்றுகை தடை தாண்டல் ) |
| 03 | சாரதி | 05 | III | PL-3-2016 (பொ.நி.சு.3/2016 இன்படி) ரூபா 25,790-10X270-10X300-10 X3 30-12X350- ரூ. 38,990அடிப்படை சம்பள அளவுத் திட்டம் ரூபா 25,790 (4 ஆவது சம்பள படிமுறைக்கு வருவதற்கு முன்னரான செயலாற்றுகை தடை தாண்டல்) |

**வேலை/களம் ஊழியர் பதவிக்கு தேவையான தகைமைகள் :**

*கல்வி தகைமைகள் : 8 ஆம் தரத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.*

*உடல் ரீதியான தகைமைகள் : நல்ல உடல், உளநலமுடையவராக இருக்க வேண்டும்.*
*ஆட்சேர்ப்பு முறை : நேர்முகப் பரீட்சை*

| புள்ளிகள் வழங்கப்படுகின்ற பிரதான தலைப்புக்கள் | உச்ச புள்ளி அளவு | தெரிவு செய்வதற்கு கருதப்படும் ஆகக் குறைந்த புள்ளி அளவு |
|---|---|---|
| ஒரு உள்ளூராட்சி நிறுவனத்தில் அமய, பிரதியீட்டு, ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றியுள்ள சேவைக் காலம் (வருடம் ஒன்றுக்கு 05 புள்ளிகள் வீதம்) | 15 | 50% |
| பதவி தொடர்பில் பெற்றுள்ள அனுபவம் பற்றிய ஏனைய சான்றிதழ்கள் | 05 | |
| உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த காலத்திற்கேற்ற சம்பவங்கள் நிகழ்வுகள் தொடர்பில் பரீட்சார்த்திகளின் அறிவு | 75 | |
| ஆளுமை | 05 | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | |

**குறிப்பு** : நிலவுகின்ற வெற்றிடங்கள் தொடர்பாக அதிக புள்ளிகளைப் பெற்றுக் கொள்ளும் தொடர் ஒழுங்கிற்கு ஏற்ப நியமனம் செய்யப்படுவதுடன் பொதுவான நேர்முகப் பரீட்சையின் போது பரீட்சித்துப் பார்க்கின்ற தேவைப்பாடுகளும் இங்கு பரீட்சித்துப் பார்க்கப்படும்.

**மோட்டார் மின்னியல் தொழில்நுட்பப் பதவிக்குத் தேவையான தமைமைகள் :-**

கல்வித் தகைமைகள் : க.பொ.த. (சா.த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்பட்ட தடவைக்கு உட்பட்டவர்களிடமிருந்து இரண்டு திறமைச் சித்திகளுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல். (இதில் ஐந்து பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்)

* பொது நிருவாக சுற்றறிக்கை 28க/2016 இற்கு ஏற்ப தொழிற் தகைமையாக தேசிய தொழிற் தகைமைகள் (NVQ) 3 தகைமைகளைப் பெற்றிருத்தல். கல்விப் பொதுத் தராதரச் சான்றிதழ்ப் (சாதாரண தர) பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் சமமாக கருதப்படும்.

தொழிற் தகைமைகள் : மேற்படி பதவிக்கு உரிய பிரகாரம் மூன்றாம் நிலை மற்றும் தொழிற்பயிற்சி ஆணைக்குழுவினால் தீர்மானித்த பிரகாரம் தேசிய தொழிற்பயிற்சி திறன்களில் (NVQ) குறைந்த பட்சம் இரண்டாம் மட்டத்தில் திறமையைப் பெற்றிருத்தல் மற்றும் குறைந்த பட்சம் உரிய துறையில் 06 மாதத்திற்கு குறையாத அனுபவத்தைப் பெற்றிருத்தல்.
(சான்றிதழின் ஊடாக உறுதிப்படுத்தல் வேண்டும்)

அனுபவம் : ஏற்புடையதன்று.

தொழில் விபரம் : சகல வாகனங்களின் மின் முறைமையில் கோளாறுகள் ஏற்படும் சந்தர்ப்பத்தில் அவற்றை இனங்கண்டு கொள்ளல் மற்றும் அவற்றை திருத்தம் செய்தல்.

உடற் தகைமைகள் : சகல விண்ணப்பதாரிகளும் மேல் மாகாணத்தில் எந்தவொரு மாவட்டத்திலும் சேவையாற்றுவதற்கும் இப் பதவி கடமைகளை நிறைவேற்றுவதற்கும் உடல் மற்றும் உளரீதியாக தகைமையுடையவராக இருத்தல் வேண்டும்.

ஆட்சேர்ப்புச் செய்யும் முறை : அடிப்படைத் தகைமைகளை பரீட்சித்தல் மற்றும் உடலியல் தகைமைகளை பரீட்சித்தல் என்பன கட்டமைப்பான நேர்முகப் பரீட்சையின் ஊடாக மேற்கொள்ளப்படும். இங்கு பெறப்படும் புள்ளிகளின் திறமை அடிப்படைக்கு ஏற்ப நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

**கட்டமைப்பான நேர்முகப் பரீட்சை :**

| புள்ளிகள் வழங்கப்படுகின்ற பிரதான தலைப்புக்கள் | உச்ச புள்ளி அளவு | தெரிவு செய்வதற்கு தேவைப்படும் ஆகக் குறைந்த புள்ளி அளவு |
|---|---|---|
| ஆட்சேர்ப்புச் செய்யும்போது தேவையான அடிப்படைத் தகைமைகளுக்கு மேலதிகமாக பெற்றுள்ள கல்வித் தகைமைகள் :<br><br>ஆட்சேர்ப்புச் செய்யும் அடிப்படை கல்வித் தகைமையாக குறிப்பிடப்பட்டுள்ள க.பொ.த. (சா.த.) பரீட்சையில், சித்திகள் பெற்றுள்ள பாடங்கள் ஆறு மற்றும் இரண்டு திறமைச் சித்திகளுக்கு மேலதிகமாக சித்தியடைந்துள்ள பாடங்கள் தொடர்பாக பெறப்பட்டுள்ள திறமைச் சித்திகள் தொடர்பாக இரண்டு பாடங்களுக்கு உட்பட்டு (02) உச்ச அளவிற்கு உட்பட்டு புள்ளிகள் வழங்கப்படும்.<br><br>சாதாரண சித்திக்கு - 04 புள்ளிகள்<br>திறமைச் சித்திக்கு - 06 புள்ளிகள்<br>உயர் திறமைச் சித்திக்கு - 08 புள்ளிகள்<br>விசேட சித்திக்கு - 10 புள்ளிகள் | 20 | 50% |
| பொது அறிவு<br>பொருளாதாரம், சமூக, கல்வி, விஞ்ஞான, கலாச்சாரம், அரசியல் மற்றும் விளையாட்டுத் துறைகளுடன் தொடர்புடைய உள்நாட்டு வெளிநாட்டு ரீதியாக முக்கியமான சமகால நிகழ்வுகள் பற்றி அபேட்சகரின் அறிவினை அளவீடு செய்வதற்கு தயார் செய்யப்படுகின்ற வினாக்களினை உள்ளடக்கியதாகும். | 75 | |
| ஆளுமை :<br>ஊழியர் நேர்முகப் பரீட்சைக்கு முகங்கொடுக்கின்ற விதம் மற்றும் வேறு விடயங்கள் பற்றி பரீட்சித்துப் பார்த்தல் | 05 | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | |

**குறிப்பு :-** கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சையில் பெற்றுக் கொள்கின்ற புள்ளிகளின் திறமைகளின் தொடரொழுங்கில் நிலவுகின்ற வெற்றிடங்கள் தொடர்பாக ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

சாரதிப் பதவிக்கு தேவையான தகைமைகள் :-

**கல்வித் தகைமைகள் :**
கல்விப் பொதுத்தராதரப் (ச./த.) பரீட்சையில் இரண்டு அமர்வுகளுக்கு மேற்படாத வகையில் இரண்டு சித்திகளுடன் (6) பாடங்களில் சித்தியடைந்திருத்தல். (அவற்றில் 5 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.)

**தொழில் தகைமைகள் :-**

1. தனியார்/வாடகை வாகனங்கள் தார்பலு 24 அந்தர்களுக்குக் குறைந்த ஸ்டேசன் வெகன் வாகனங்களை செலுத்துதல் தொடர்பில் மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகத்தினால் விநியோகிக்கப்பட்ட வாகனம் செலுத்துவதற்கான அனுமதி அட்டையை பெற்றிருத்தல். (ஆட்சேர்க்கப்படும் தினத்தின் போது மூன்று (03) வருடங்களுக்கு முன் குறைந்தது “சீ” மற்றும் “சீ1” வகுப்பைச்

சேர்ந்த சாரதி அனுமதிப் பத்திரமொன்றை அல்லது புதிய வாகன அனுமதிப்பத்திரம். ''பீ'' வகுப்பைச் சேர்ந்த சாரதி அனுமதிப்பத்திரமொன்றை பெற்றிருத்தல் வேண்டும்.)

2. வீதி சட்டவியல் கோவை பற்றிய நல்ல அறிவு பெற்றிருக்க வேண்டும்.

**அனுபவம்** : சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக் கொண்ட பின் குறைந்தது மூன்று (03) வருட கால அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.
(முறையான சான்றிதழ்களின் மூலம் அனுபவம் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.)

**உடல் ரீதியான தகைமைகள்** : ஆகக்குறைந்தது ஐந்து அடி (5) உயரம் இருக்க வேண்டும். பகல் நேரங்களில் போன்று இரவு நேரங்களிலும் தொழிலில் ஈடுபடக்கூடிய வகையில் நல்ல உடல் நிலை இருக்க வேண்டும். நல்ல கணபார்வை இருக்க வேண்டும். அரச வைத்தியரால் விநியோகிக்கப்பட்ட மருத்துவ சான்றிதழ் மூலம் அது உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

**ஆட்சேர்ப்புச் செய்யும் முறை** : தொழில்சார் தமைமைகளைப் பரீட்சித்தல் மற்றும் நேர்முகப் பரீட்சையின் ஊடாக மேற்கொள்ளப்படும். இங்கு பெறப்படும் புள்ளிகளின் திறமை அடிப்படைக்கு ஏற்ப நிலவுகின்ற வெற்றிடங்களுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்படும்.

**தொழில்சார் தகைமைகளைப் பரீட்சித்தல்** :

| விடயங்கள் | உச்ச புள்ளி அளவு | சித்தியடையத் தேவையான புள்ளி அளவு |
|---|---|---|
| 1. வாகனத்தை செலுத்தும் திறன் | 40 | 20 |
| 2. வீதிச் சட்டங்கள் பற்றிய நடைமுறை அறிவு | 40 | 20 |
| 3. மோட்டார் இயந்திரவியல் பற்றிய அடிப்படை அறிவு | 20 | 10 |
| மொத்தம் | 100 | 50 |

மேற்குறிப்பிட்ட தொழில்சார் பரீட்சிப்பு ஆட்சேர்ப்புக்கு அதிகாரியால் நியமிக்கப்படுகின்ற/பதவிநிலை அலுவலர் ஒருவர்/மோட்டார் வாகன போக்குவரத்து ஆணையாளர் திணைக்களத்தின் மோட்டார் வாகன பரிசோதகர் ஒருவர் மற்றும் பொலிஸ் மோட்டார் வாகன போக்குவரத்து பிரிவின் அலுவலர் ஒருவரினால் நடாத்தப்படும்.

**பொதுவான நேர்முகப் பரீட்சை** : ஆட்சேர்ப்புச் செய்யும் ஆரம்ப தகைமைகளை பரீட்சிப்பதற்காக நடைபெறும் புள்ளி வழங்கல் இடம் பெறாது.

**சகல பதவிகளுக்குமான வேறு தகைமைகள்** :

- இலங்கை பிரசையாக இருக்க வேண்டும் ;
- விண்ணப்பதாரி நல்ல குணநலமுடையவராக இருக்க வேண்டும்;
- விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித்திகதி என அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியின்போது விண்ணப்பதாரி மேல் மாகாணத்தில் குறைந்தது மூன்று (03) வருடங்கள் நிரந்தரமாக வசித்துள்ளதாக உறுதிப்படுத்த வேண்டும்;
- விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதி என அறிவித்தலில்/வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ள திகதியின் போது விண்ணப்பதாரி தேவையான தகைமைகளை பூர்த்தி செய்திருக்க வேண்டும்.

**வயது** : வயது எல்லை - விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளும் திகதியின் போது 18 வயதுக்கும் 45 வயதுக்கும் உட்பட்டவராக இருக்க வேண்டும்.
(தற்போது மேல் மாகாணஅரச சேவையில் நிரந்தர மற்றும் ஓய்வூதியம் இருப்பவர்களுக்கு குறித்த வயதெல்லை கவனத்திற்கொள்ளப்பட மாட்டாது - சாரதி பதவிக்காக)

**பதவியின் தன்மை** : நிரந்தரமானது, ஓய்வூதியச் சம்பளத்திற்கு உரியது.

| மொழி | | பெற்றுக்கொள்ள வேண்டிய தேர்ச்சிகள் |
|---|---|---|
| 1. | அரசமொழி | அரசகருமமொழியல்லாத மொழியின் ஊடாக சேவைக்கு இணைந்த ஊழியர்களினால் உரிய அரச கரும மொழித் தேர்ச்சியை தகுதிகாண் காலத்தின்போது பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். |
| 2. | ஏனைய அரச மொழி | பொ.நி.சு. 01/2014 மற்றும் அதனுடன் இணைந்த சுற்றறிக்கை ஒழுங்குவிதிகளுக்கு ஏற்ப உரிய மட்டத்தில் மொழி தேர்ச்சியை பெற்றுக் கொள்ளுதல் வேண்டும். |
| 3. | இணைப்பு மொழி (தொடர்புடையதாயின் மாத்திரமே) | ஏற்றுடையதன்று |

**பதவியின் நிலைமை :** நிரந்தரமானது.

மேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக் குழு நடபடிமுறைகள் மற்றும் ஒழுக்கக்கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள பொதுவான நிபந்தனைகளுக்கு வேறான நிபந்தனைகள் :-

தேர்ந்தெடுக்கப்படுபவர்கள் இலங்கைச் சனநாயக சோசலிச குடியரசின் தாபனவிதிக்கோவையின் ஏற்பாடுகளுக்கும் மேல் மாகாண சபை நிதி நிறுவனக் கோவைக்கும் மேல் மாகாண கௌரவ ஆளுநரால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் நிபந்தனைகள் அல்லது கட்டளைகளுக்கும் மேல்மாகாணஅரச சேவைகள் ஆணைக்குழுவினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் கட்டளைகளுக்கும் அமைச்சு மற்றும் திணைக்கள கட்டளைகளுக்கும் நிறுவனதலைவர்களால் வெளியிடப்படும் கட்டளைகளுக்கும் இணங்கி ஒழுக வேண்டும்.

மேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக் குழு நடபடிமுறைகள் மற்றும் ஒழுக்கக் கோவையில் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருள்கோடல்களுக்கு புறம்பான பொருள் கோடல்கள் :-

மேல் மாகாண சபை அரச சேவைகள் ஆணைக் குழு நடபடிமுறைகள் மற்றும் ஒழுக்கக் கோவையில் குறித்துரைக்கப்பட்டுள்ள பொருள்கோடல்களுக்கு புறம்பான பொருள் கோடல்கள் எதுவேனும் இருக்குமாயின் அது பற்றி மேல் மாகாண அரச சேவைகள் ஆணைக் குழு/மேல் மாகாண கௌரவ ஆளுநர் ஆராய்ந்து செயற்படுவார்.

நகர ஆணையாளர் - (கடமைகள் நிறைவேற்றுதல்),
நீர்கொழும்பு.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**மேல் மாகாண அரச சேவை பதவி வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்பு**

நீர்கொழும்பு மாநகர சபை [ ]
(அலுவலக உபயோகத்திற்காக)

1. முதலெழுத்துக்களுடன் பெயர் :- ........................................
2. முழுப் பெயர் :- ........................................
3. பால் :- (ஆண்/பெண்) : ........................................
4. தேசிய அடையாள அட்டை இலக்கம் : | | | | | | | | | | | | |

தொலைபேசி இல. : ........................................

5. விண்ணப்பித்தபதவி :- ........................................
6. நிரந்தர வதிவிட முகவரி :- ........................................

7. தபால் முகவரி :- ..........................................................................................

8. நிரந்தரமாக வதியும் மாவட்டம் :- ..........................................................................................

9. நிரந்தரமாக வதியும் பிரதேச செயலாளர் பிரிவு :- ..........................................................................................

10. நிரந்தரமாக வதியும் உள்ளூராட்சி நிறுவன அதிகார பிரதேசம் :- ..........................................................................................

11. பிறந்த திகதி :- ..........................................................................................

12. 2018.05.27 ஆந் திகதியின்போது வயது :- ..........................................................................................

13. கல்வித் தகைமைகள் (பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்) :- ..........................................................................................

14. அனுப்பவம் -(சாரதி பதவிக்காக பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்) :- ..........................................................................................

15. பதவி தகைமைகள் - (சாரதி பதவிக்காக பிரதிகள் இணைக்கப்பட வேண்டும்) :- ..........................................................................................

16. வேறு தகைமைகள் :- ..........................................................................................

17. நீங்கள் எப்போதேனும் ஒரு நீதிமன்றத்தில் குற்றவாளியாக காணப்பட்டுள்ளீர்களா என்பது :- ..........................................................................................

இங்கு குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் யாவும் உண்மையானவை என உறுதிப்படுத்துகின்றேன். முன்வைக்கப்படும் ஏதேனும் ஒரு விபரம் பொய்யானதென நியமனம் வழங்கப்படுவதற்கு முன் உறுதிப்படுத்தப்படுமாயின் நான் தகுதியற்றவராக கருதுவதற்கும், நியமனம் வழங்கப்பட்ட பின் அவ்வாறு உறுதிப்படுத்தப்படுமாயின் பதவி நீக்கம் செய்வதற்கும் ஆளாகுவேன் என்பதனை அறிவேன்.

..............................................,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : ...............................

தற்போது அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரிகளுக்கு நிறுவனத் தலைவரின் சான்றிதழ் :

இந்த விணணப்பதாரியான திரு./திருமதி/செல்வி ....................................... தற்போது இத் திணைக்களத்தில்/நிறுவனத்தில் ....................... ஆக சேவையாற்றுகின்றார். இப்பதவி தொடர்பாக அவர்/அவள் தற்போது வகிக்கின்ற பதவியிலிருந்து விடுவிக்க முடியும்/முடியாது. அவர்/அவள் எந்த விதத்திலும் அல்லது ஒழுக்காற்று தண்டனையொன்றுக்கு (எச்சரித்தல் தவிர) ஆளாகவில்லை என நான் உறுதிப்படுத்துவதுடன் விண்ணப்பத்தை சிபாரிசு செய்கின்றேன்/செய்யவில்லை.

..............................................,
திணைக்களம்/நிறுவனத் தலைவரின் கையொப்பம்.

பெயர் :- ...................................................................
பதவி :- ...................................................................
திகதி :- ...................................................................

4-1020

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

## யட்டிநுவர பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(1) ஆவது பிரிவின் கீழ் விடுக்கப்படும் அறிவித்தல்*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24 ஆவது பிரிவின்படி மத்திய மாகாணத்தின் கண்டி மாவட்டத்தில் யட்டிநுவர பிரதேச சபையின் மூலம் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதைகள் யட்டிநுவர பிரதேச சபைக்குச் சொந்தமான பாதையென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*இது பற்றி இப்பிரதேசத்தின் பொதுமக்கள் அல்லது பாதையுடன் சம்பந்தப்படும் காணி உரிமையாளர்கள் எவரும் இருப்பின், தமது உரித்துரிமையை அல்லது எதிர்ப்பைக் காட்ட வேண்டுமெனின், இந்த அறிவித்தல் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட ஒரு மாத காலத்துக்குள் தமது உரித்துரிமையை நிரூபிப்பதற்கென 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 24(2) ஆவது பிரிவின்படி செயற்படுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*இந்தக் கால எல்லைக்குள் இந்த அறிவித்தல் பற்றிய எதிர்ப்புக்கள் முன்வைக்கப்படவில்லை எனில், பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதைகள் யட்டிநுவர பிரதேச சபைக்கு உரித்தான பாதைகளாகக் கொள்ளப்பட்டு நிரந்தரமாகப் பராமரிக்கப்பட்டு வரும் என்பதைப் பொதுமக்கள் அறிந்து கொள்ளும் பொருட்டு இத்தால் வெளியிடுகின்றேன்.*

*டபிள்யூ. ஏ.எல்.துஷாரி ஜயரத்ன,*
*செயலாளர்,*
*யட்டிநுவர பிரதேச சபை,*
*யட்டிநுவர.*

*யட்டிநுவர பிரதேச சபை அலுவலகம்,*
*எம்பில்மீகம,*
*பிலிமத்தலாவ.*

| தொடர் இல. | பாதையின் பெயர் | கிராம அலுவலர் பிரிவு | ஆரம்பம் | முடிவு | இடது புறம் | வலதுபுறம் | நீளம் மீற்றர் | அகலம் மீற்றர் | நில வரைபட உறுதி இல. |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 01 | பாம்வத்த பாதை | பஹல முதலி வத்த | பஹாய் சென்டரி லிருந்து நாகஹமுல வரை செல்லும் பாதையின் பாலத்தின் அருகில் | தும்மலதெனிய நீரோடையின் குறுக்கே மயானம் வரை செல்லும் பாதை | | டப்ளிவ். ரத்நாயக்க ஐ.பி. பியதாச டீ.ஜீ. சந்திரா ஆரியலதா டப்ளிவ்.டி. தம்மிக்கா ஹேமந்தி ஐ.பி. பிரியந்த ஜயவர்தன ஏ.ரணவீர பீ.எம். இலங்கோன் ஈ.என். ஜயதிலக்க | 190.00 மீ | 2.43மீ | 3688 |

*04-831*

---

## கம்புறுபிட்டிய பிரதேச சபை

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் பிரதேச சபைச் சட்டத்தின் 24(1)(ஆ) கீழான அறிவித்தல்*

*1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்கம் பிரதேச சபைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் பிரகாரம் தென் மாகாண சபையின் மாத்தறை மாவட்டத்தின் கம்புறுபிட்டிய பிரதேச சபையினால் இங்கு கீழே இணைக்கப்பட்ட அட்டவணையில் குறித்த வீதி/வீதிகள் கம்புறுபிட்டிய பிரதேச சபைக்குரிய வீதிகளாக விளம்பரப்படுத்தப்படுவதாக இத்தால் மூலம் அறியத்தருகின்றேன்.*

இது தொடர்பாக பிரதேசத்தின் பொது மக்களினால் இவ் வீதி /வீதிகள் தொடர்பாக உரிய காணி உரிமையாளர்களாக உரிமை கோருபவர்கள் ஏதாவது மறுப்புக்கள் தெறிவிப்பதாயின், இவ்வறிவித்தல் விடுக்கப்பட்ட திகதியிலிருந்து ஒரு மாத்திற்குள் தாங்களின் உரித்தை உறுதிப்படுத்துவதற்காக 1987ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24 (2) பிரிவின் பிரகாரம் நடைமுறைப்படுத்தப்படுவதாக இதன் மூலம் அறியத்தருவதோடு,

இக்கால வரையறைக்குள் ஏதும் மறுப்புக்கள் முன் வைக்கப்படாதவிடத்து, அட்டவணையில் குறித்த வீதி/வீதிகள் கம்புறுபிட்டிய பிரதேச சபைக்குரிய வீதி/ வீதிகள் என ஏற்றுக் கொண்டு நிரூவகிக்கப்படுவதாக பொது மக்களின் கவனத்திற்கு இத்தால் மூலம் அறியத்தருகின்றேன்.

கம்புறுபிட்டிய பிரதேச சபை,
கம்புறுபிட்டிய.

கம்புறுபிட்டிய பிரதேச சபை அலுவலகம்,
கம்புறுபிட்டிய,
2017, ஒற்றோபர் 10.

கம்புறுபிட்டிய பிரதேச சபை வீதிகளை பதிவு செய்தல்

| வீதியின் பெயர் | கிராம உத்தியோகத்தர் பிரிவு | இரு பக்கங்களிலும் உள்ள காணி வலது | இடது | ஆரம்பம் | முடிவு | தூரம் மீட்டர் | அகலம் மீட்டர் |
|---|---|---|---|---|---|---|---|
| திவெல் வத்த | 321 | கே.கே.சோமாவதீ வதியும் காணி | என்.ரீ. அபேகுணவர் தனவுக்குரிய கரயெல்தெனிய கும்புர | கம்புறுபிட்டிய கிரிந்த பிரதான வீதி | டி.என். அபேகுணவர் தனவின் காணி | 340 | 06 |
| | | கரயெல்தெனிய சான்த அபேகுண வர்தன ஆகியோர் களுக்குரிய கரயெல் தெனிய கும்புர | எம்.கே அபேகுணவர்தனவுக் குரிய கொரக்ககஹவத்த | | | | |
| | | எம்.கே அபேகுணவர்தன வுக்குரிய கொரக்க கஹவத்த காணி | என்.ரீ. அபேகுணவர்தனவுக் குரிய கொரக்ககஹவத்த (துண்டாக்கப்பட்ட) காணி | | | | |
| | | என்.ரீ. அபேகுணவர்தன வுக்குரிய கோரக்க கஹவத்த (துண்டாக் கப்பட்ட) காணி | | | | | |

4-833

# நானாவித அறிவித்தல்

## கட்டுவன பிரதேச சபை

*2018 ஆம் ஆண்டுக்கான சுடலைக்கூட பாவனைக்கான கட்டண விதிப்பு*

*கட்டுவன பிரதேச சபையினால் 2018 ஆம் ஆண்டிற்காக சுடலைக்கூடத்தை பயன்படுத்துவதற்காக கட்டணம் அறவிடுவதற்கான பிரேரனை 2018, மாச்சு மாதம் 02 ஆந் திகதி நடாத்தப்பட்ட நிதி மற்றும் கொள்கை வகுத்தல் குழுவின் இலக்கம் 14 சிபார்சின் படி தீர்மான இலக்கம் 532 இன் கீழ் என்னால் பின்வரும் தீர்மானம் எடுக்கப்பட்டதாக பொதுமக்களுக்கு இத்தால் அறியத்தருகின்றேன்*

டபிள்யூ. கே. சுரங்க,
செயலாளர்,
கட்டுவன் பிரதேச சபை,
கட்டுவன்.

கட்டுவன் பிரதேச சபை அலுவலகம்,
கட்டுவன்,
2018, மாச்சு 02.

**தீர்மானம்**

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபை (வகிபாக விதிமுறைகள்) சட்டவாக்கின் 2 வது பிரிவின் (1) வது உப பிரிவின் (அ) பந்தியில் மொழியப்படுகின்ற 261 ஆம் அதிகாரமான 1952 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க உள்ளூராட்சி நிறுவன (நிறைவேற்றுத்துணை விதிகள்) சட்டத்தின் 2 வது பிரிவின் (1) வது உப பிரிவின் படி கிடைத்துள்ள அதிகாரங்களின்படி தென்மாகாண மாகாண, மாகாண சபை தென்மாகாண முதலமைச்சரும் உள்ளூராட்சி விடயதான அமைச்சரினால் தயாரிக்கப்பட்டதுவும் 2013, மே மாதம் 17 ஆந் திகதிய1811 வது இலங்கை சனநாயகச் சோசலிச குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.08.29 ஆந் திகதியின் 1878 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட அறிவுறுத்தல் மூலம் வெளியிடப்பட்ட நிறைவேற்றுத் துணைவிதிகளில் xxiii கொண்ட பிரிவு சுடலைக்கூடம் முறைமைப்படுத்தல் பரிபாலித்தலுக்கான கட்டணம் அறவிடுதல் தொடர்பான துணைவிதி அடங்கிய பிரேரனை வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட தினத்திலிருந்து செயல்படுத்தப்படவேண்டுமென்று 2015, யூலை 17 ஆந் திகதி கூடிய கட்டுவன பிரதேச சபை கொள்கை வகுத்திடும் மற்றும் நிதி தொடர்பான குழுவின் தீர்மான இலக்கம் 9 இன் படி தீர்மான இலக்கம் 26 இன் கீழ் அங்கீகரித்து 2014, திசெம்பர் 2 ஆந் திகதிய 1996 ஆம் இலக்கங் கொண்ட வர்த்தமானியில் IV (அ) பிரிவில் பிரசுரிக்கப்பட்டுள்ளது 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டவாக்கின் 09 (03) உப பிரிவின்படி எனக்கு கிடைக்கப்பெற்றுள்ள அதிகாரங்களின்படி 2018 ஆம் ஆண்டுக்கான கட்டுவன பிரதேச சபைக்குச் சொந்தமான சுடலைக் கூடத்துக்காக பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளவாறு உரிய கட்டணங்களை அறவிடுவதற்கு கட்டுவன பிரதேச சபை பிரேரிக்கின்றது.*

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| 1. | கட்டுவன பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் வசித்திடும் ஒருவரின் பிரேதத்தை தகனஞ்செய்திட | 6500.00 ரூபா |
| 2. | கட்டுவன அதிகாரப் பிரதேசத்திற்கு வெளியே வசித்திடும் ஒருவரின் பிரேதத்தை தகனஞ் செய்திட | 7500.00 ரூபா |

4-847